**அ.வ.எண். 313/2023**
**வா.சா.1 : சுசீலா**
**தேதி : 08.04.2026**
**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**
**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

தாவா சொத்தினை விற்றுவிட்டார்கள். விற்றபிறகு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 23.08.2010 ஆம் தேதியன்று உங்கள் தகப்பனார் பழனியப்பபிள்ளை, உங்களுடைய சகோதரர் சுப்பிரமணியன், 2ம் பிரதிவாதியின் கணவர் வடிவேல் ஆகியோர் சேர்ந்து தாவா சொத்தில் உள்ள 1 ஏக்கர் 88 செண்ட்டை 6ம் பிரதிவாதி N.கிருஷ்ணகுமாருக்கு விற்றுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 48 செண்ட் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் மேலே கூறிய விற்பனை செய்த விஸ்தீரனமான 1 ஏக்கர் 88 செண்ட் போக மீதியுள்ள 1 ஏக்கர் 28 செண்ட் தான் பாகம் வரும் என்றால் சரியல்ல. 23.08.2010க்கு பிறகு தாவா சொத்தில் 2010 ஆம் ஆண்டிலிருந்து 6ம் பிரதிவாதி கிருஷ்ணகுமார் ஒரு கம்பெனி நடத்தி வருகிறார் என்றால் சரிதான். நீங்கள் கூறும்படி தாவா சொத்தில் உங்களுக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.04.08 17:11:35 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.